# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை

## ஓ.எஸ். 49/2021

## 2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 ம் நாள் வெள்ளிக்கிழமை

வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1)ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : **பார்த்திபன்** | சாதி : |
| த/பெ : | சமயம் : |
| கிராமம் : | தொழில் : |
| வட்டம் : | வயது : |

**வா.சா.2 பார்த்திபன் ஆஜர்**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 2 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் எனது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) மு.வ.எண்.1/2013 வழக்கின் பிராது சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்கிறேன்.

2) 23.02.2016 ம் தேதியிட்ட மு.வ.எண்.1/2013 வழக்கின் தீர்ப்புரை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்கிறேன்.

3) 23.01.2019 ம் தேதியிட்ட நத்தம் புல எண்.215/41 என்ற எண்ணில் 1ம் வாதி பெயரில் மானாமதுரை வட்டாட்சியரால் வீ.ம.ஒ.எண்.18/1428 என்ற எண்ணில் வழங்கிய ஒப்படைப்பு உத்தரவு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்கிறேன்.

4) 12.08.2020 ம் தேதியிட்ட மேற்படி வீட்டிற்கான கட்டிட வரைபட அனுமதி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்கிறேன்.

5) 09.08.2021 ம் தேதியிட்ட 1 வது லக்கச் சொத்துக்கு 2 ம்வாதிபெயரில் செலுத்திய வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்கிறேன்.

6) 09.08.2021ம் தேதியிட்ட 2வது லக்கச் சொத்துக்கு 1ம் வாதி பெயரில் செலுத்திய வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்கிறேன்.

**பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**ஓம்/S.முகமது யூசுப் நவாஸ்**
District Munsif, Manamadurai